# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/17 - 2017 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2017.02.14

*2006/17 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தறை IV ஆவது கட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் உள்வாங்கு கிணறு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிக்கின்ற இடத்திற்கு உட்செல்லும் பாதையை விரிவாக்குவதன் பொருட்டு காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, பெப்புருவரி 01,
5/2/2/1253.

### அட்டவணை

மாத்தறை மாவட்டத்தில், மாலிம்பட பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 350 A - கடுவன்கொட கிராம அலுவலர் பிரிவில், கடுவன்கொட கிராமத்தில் அமைந்துள்ள அரலுகஹ கொரடுவ என்றழைக்கப்படும் காணியில் இருந்து சுமார் 01 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்தக் காணியின் எஞ்சியுள்ள பகுதி ; |
| கிழக்கு | : | ஆற்றுக்குச் செல்லும் சரளைக்கற் பாதை ; |
| தெற்கு | : | ஆற்றுக்குச் செல்லும் சரளைக்கற் பாதை ; |
| மேற்கு | : | இந்தக் காணியின் எஞ்சியுள்ள பகுதி. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:

1. திரு. டபிள்யூ. ஏ. கே. சரத்சந்திர,
   கேமெட்டிகே வத்த, கடுவன்கொட,
   பாலடுவ.

2. திருமதி நாலனி ஹதரசிங்ஹ,
   அரலுகஹ கொரடுவ, கடுவன்கொட,
   பாலடுவ.

03- 40



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.